# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, சென்னை –600 032.
தொலைபேசி: 044–22201337/நிகரி எண்.22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 0753/ஊராட்சி/2018/ நாள்: 20/06/2018

– **முறையீட்டு மனுதாரர்**

திரு. T. ராஜா,
1/233, பாரதி நகர்,
கோவில் பாளையம் (அஞ்சல்),
கிணத்துக்கடவு வட்டம் – 642 110.

வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் பலர்.
மதுக்கரை ஊராட்சி ஒன்றியம்,
மதுக்கரை.

– **எதிர் மனுதாரர்கள்**

## ஆணை:

கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை ஊராட்சி ஒன்றியம், கோவில்பாளையம் கிராமத்தில் வசிக்கும் திரு. T. ராஜா அவருடைய 9.6.2018 நாளிட்ட புகார் மனுவில் மதுக்கரை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மயிலேரிபாளையம் ஊராட்சியில் பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ் 2015–16ம் ஆண்டு அரசு ஊழியர் திருமதி. புவனேஸ்வரி அவர்களின் மாமியார் திருமதி. சரசம்மாள் அவர்களுக்கு வீடுகட்ட பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்றும், பசுமை வீடுகள் கட்டுவதற்கான பணி ஆணை விதிமுறைகட்கு மாறாக அரசு ஊழிர்களின் நெருங்கிய உறவினர் பெயரில் தந்து பின்னர், இரண்டாவது மற்றும் மூன்றாவது தவணைத் தொகை திருமதி. புவனேஸ்வரி பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்றும், அரசு ஊழியருக்கு, அரசு ஊழியரின் நெருங்கிய உறவினரின் பெயரை பயன்படுத்தி அரசு மானியம் ரூ.2.10 லட்சம் முறைகேடாக பயன்படுத்தப்பட்டுள்ளது என்றும், இந்த வீடு அரசு அளித்துள்ள Type – Design – ன்படி கட்டவில்லை என்றும், இந்த வீட்டினை ஆய்வு செய்யாமல், ஒன்றிய பொறியாளர்கள், உதவி பொறியாளர்கள் அளவுகளை பதிவு செய்து தொகை வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, இதற்கு பொறுப்பான அலுவலர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

2. 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு (7)ன்படி "உள்ளாட்சி அமைப்பு" என்பதற்கான பொருளில் "ஊராட்சி மன்றம்" மற்றும் "ஊராட்சி ஒன்றியம்" என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. எனவே மனுதாரரின் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் நடவடிக்கை எடுப்பதற்கு வழிவகைகள் இல்லை. எனவே இம்மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவர், கோயம்புத்தூர் மாவட்டம் அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக மேலனுப்பலாம் என முடிவு செய்து அவ்வாறே அனுப்பப்படுகிறது. மேலும் இப்பொருள் குறித்து கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகுமாறு மனுதாரருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2018-ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 20-ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவருக்காக**

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை–600 032

**செயலாளர்.** 21/6/18

<u>பெறுநர்</u>

திரு. T. ராஜா,
1/233, பாரதி நகர்,
கோவில் பாளையம் (அஞ்சல்),
கிணத்துக்கடவு வட்டம் – 642 110.

<u>நகல்</u>

1. மாவட்ட ஆட்சித் தலைவர்,
   கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர். (இணைப்புகளுடன்)
2. முறைமன்ற நடுவர் அவர்களின் நேர்முக எழுத்தர்.
3. உதவி பிரிவு அலுவலர் (ஊராட்சி)